THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கூட்டுப்பட்டா என்ற ஒரு சிரமம் மட்டுமல்ல. யார் வேண்டுமானாலும் மனுப்போட்டால் அவர்களுக்கெல்லாம் கடன் வசதி செய்து கொடுக்க முடியாது. இவையெல்லாம் பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்தவாறு கடன் கொடுக்க முடியுமே தவிர, யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்பதற்காக, அதற்குத் தகுந்தவாறு அடிப்படை விதியை மாற்றுவது என்றால் அது சரியல்ல."

SRI M. DHARMALINGAM :—" The agriculturists living in ryotwari villages are enjoying the facilities given under Agricultural Loans Act, whereas the villagers living in zamindari villages have not been given such opportunities by the Government for the simple reason that these villages have not been surveyed. Will the Government consider the desirability of giving loans basing upon the personal security?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" That may be examined. But I can assure the hon. Member that my hon. Colleague, the Minister for Revenue, is taking every possible step to expedite the survey of these zamindari lands."

SRI M. NARAYANA KURUP :—" Sir, are not the Government aware that patta is not evidence of title and there is very often wrong registration of pattas and they are not the real owners?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" That is true, Sir. Patta is not the evidence of title of the person in whose name it stands. But at the same time that will not offer evidence in favour of the applicant who has not got patta at all."

SRI S. RAMALINGAM :—" ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் சொந்தமாக இருந்து, அதற்கு வேண்டிய போதுமான டாகுமெண்டுகளும், ரிகார்டுகளும் இருந்தாலும்கூட, பட்டா இல்லை என்பதற்காக கடன் வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை. அல்லது கூட்டுப்பட்டாவாக இருக்கிறது என்பதற்கும் மறுக்கப்படுகிறது. அதைத் திருத்தி டாகுமெண்ட் செகியூரிடி, நில செகியூரிடி இருந்தாலே அதன் பேரில் நிபந்தனையின்றி கடன் வசதி செய்து கொடுப்பார்களா ? எனென்றால் பட்டா வாங்குவது என்றால் ரொம்பவும் சிரமமாக இருக்கிறது. ஒரு எக்கர் நிலம் துண்டாக இருக்கும், ஒரு 15 எக்கர் நிலம் ஒன்றாக இருக்கும். ஒரு எக்கர் வைத்திருப்பவர் கையெழுத்து போட மறுத்தால், பட்டா செய்து கொடுக்கப்படுவதில்லை. இந்தக் கஷ்டங்களெல்லாம் இருப்பதால், பட்டா கேட்பதை நிறுத்திக்கொண்டு, நிலம் சொந்தமென்றிருந்தாலே கடன் வசதி செய்து கொடுப்பார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் சீக்கிரத்திலே சர்வே செய்து கொடுத்தால், இந்தக் கஷ்டங்களெல்லாம் வராது."

Harijans' localities in Chidambaram taluk.

* 1665 *Q.*—SRI G. VAGHEESAM PILLAI : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether there is any scheme to extend the areas of the localities where Harijans live in Chidambaram taluk;

(*b*) if so, the number and names of the villages included in the scheme; and

30th March 1955]

(*c*) when the work will be taken up

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) A scheme proposed by the Collector for the speedy provision of house-sites to Harijans in 54 villages in Chidambaram taluk is under consideration.

" (*b*) A statement[a] is laid on the table of the House.

" (*c*) It is not possible to say."

SRI G. VAGHEESAM PILLAI :—" சிதம்பரம் தாலூகாவிலே சேரி விஸ்தரிப்பு செய்யவேண்டிய இடம் நஞ்சை நிலமாக இருப்பதால், அவைகளை குடியிருப்பு முதலியவைகளுக்கு உபயோகிக்கக்கூடாது என்ற சட்டத்தை திருத்தி விரைவில் நஞ்சை நிலத்தை acquire செய்து சேரி விஸ்தரிப்பு அமுல் நடத்த கனம் மந்திரி அவர்கள் கவனிப்பார்களா? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" இந்த விஷயம் பற்றி கலெக்டரிடமிருந்து ஒரு ரிப்போர்ட் வரவேண்டியிருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையை பரிசீலனை செய்யும்படியாகச் செய்கின்றேன்."

SRI A. S. SAHAJANANDA :—" ஐந்தாண்டுத் திட்டத்திலே ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி ஐந்தாண்டு திட்டத்திலே சொல்லியிருப்பதாலே, வீடு கட்டும் மனை கொடுக்கப்பட இருக்கின்றது."

SRI G. VAGHEESAM PILLAI :—" இந்த 54 கிராமத்திலே சேரி விஸ்தரிப்பு செய்தால் எவ்வளவு செலவாகும் என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிக்க முடியுமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" ஏறக்குறைய 3 லட்சம் ரூபாய் செலவாகுமென்று நினைக்கிறேன்."

Additional staff for panchayats.

* 1667 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint 1,500 clerks and Deputy Panchayat Officers in the local bodies in the State during 1955–56 ; and

(*b*) if so, the number of posts of clerks and Deputy Panchayat Officers that will be reserved for Harijans and Backward Classes?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) The Government have decided to appoint about 1,000 clerk-*cum*-bill-collectors for groups of panchayats, each of which cannot afford to have a separate staff of its own. There is no proposal to appoint any Deputy Panchayat Officer at present, in addition to the existing number.

" (*b*) The attention of the hon. Member is invited to the answer to clause (*c*) of question No. 1171 delivered on the 8th March 1955, in regard to reservation of posts of clerk-*cum*-bill collectors for communities."

---

[a] Printed as Appendix I on page 770 infra.